விலை முக்காலணா

K. T. Ranganathan

இலங்கை 8 சதம்

சந்தா விவரம்

1 ஆண்டு ரூ. 18-0-0
6 திங்கள் ரூ. 9-0-0
3 திங்கள் ரூ. 4-8-0

தனிப்பிரதி முக்காலணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

மாலை மணி

(திராவிடர் தமிழ்த் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர்: மு. கருணாநிதி

MALAI MANI

Tamil Daily

விளம்பர விகிதம்

அங்குலம் பத்தி ஒன்று ரூ. 5-0-0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு

பி. ஆர். கோதண்டபாணி ''அறிவாலயம்'' மானேஜா

25/6. திருவள்ளுவர் குடியிருப்பு ''மாலை மணி''

கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-600 78.

Phone: No. 4502

மாலை 2 ‖ சென்னை: 8—8—51 புதன்கிழமை ★ வெளியூர்: 9—8—51 வியாழக்கிழமை ‖ மணி 240

ஈரோட்டில் கண்கொள்ளாக் காட்சி!

150 காங்கிரஸ்காரர்கள் காங்கிரசிலிருந்து விலகினர்

பர்துவான், ஆக. 7—

பர்துவானில் 150-க்கு மேற்பட்ட காங்கிரஸ்காரர்கள் காங்கிரசைவிட்டு விலகிவிடுவதென்று தீர்மானித்து விட்டார்கள்.

......

அமெரிக்காவிலும் ஆறவுன்சுகள்

வாஷிங்டன், ஆக 7—

அமெரிக்க காங்கிரசின் மெம்பர் சராசரி ஆண்டு சம்பளம் ரூ. 50,000 ஆகும். சிலர் இதைவிட இரட்டிப்பான வருமானமும் பெறுபவர்கள்.

இவ்வளவு சம்பளம் வந்தும் சிலர் காங்கிரசிலிருந்து பதவியை ராஜினாமா செய்கிறார்கள்.

விலைவாசிகள் உயர்ந்துள்ள இது சமயத்தில் தாங்கள் காங்கிரஸ் மெம்பர்களாக இருந்து அதனால் கிடைக்கும் வரும்படி போதாது என்று இவர்கள் சொல்லி வியாபாரத்தில் ஈடுபடுகிறார்கள்.

......

இரயில்வே வேலை நிறுத்தம்

——

10-ந் தேதி நோட்டீஸ்

சென்னை, ஆக 7—

ஆகஸ்ட் 10-ந் தேதியன்று பல்வேறு இரயில்வேக்களிலும் வேலை நிறுத்த நோட்டீஸ் சமர்ப்பிக்கப்படும் என்று அகில இந்திய இரயில்வேதொழிலாளர்சம்மேளன காரியதரிசி அறிவித்துள்ளார், சம்மேளனத்தின் நடவடிக்கை கமிட்டி கூட்டம் 10-ந்தேதி பம்பாயில் நடக்கும் அதில் வேலை நிறுத்தம் பற்றி இறுதி முடிவு செய்யப்படும்.

——

அப்துல்லா கொலை: சந்தேகப்பட்டவர்கள் விடுதலை

அம்மான், ஆக. 8—

மன்னர் அப்துல்லா கொலை செய்யப்பட்டதை யொட்டி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் அநேகர் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது.

எதிரிகள் மீது குற்றப்பத்திரிகை தயார் ஆகிவிட்டதென்று அடுத்த சில தினங்களில் விசாரணை துவங்கும் என்றும் தெரிகிறது.

புலன் விசாரணை இன்னும் நடைபெற்று வருகிறதென்றும் முக்யமான புது தகவல்கள் கிடைத்துள்ளதென்றும் கூறப்படுகிறது.

தன்மான வீரர்களின் முழக்கம்

.....................(0).....................

அறிஞர் அண்ணாவின் அறிவுரை

.............×..............

சமூகச் சீர்திருத்த மாநாடு நிகழ்ச்சிகள்

(முழு விவரம்)

ஈரோடு, ஆக. 6—

''ஈரோடு ஸ்பெஷல் திராவிடக்கழக மாநாட்டிற்குப் பிறகு பெரும் பந்தல் போட்டு சிறப்பாக நடைபெறுவது இம்மாநாடுதான்'' என்று ஈரோட்டு மக்கள் வாய்விட்டுக் கூறும்படி பெருமைவாய்ந்ததாக இருந்தது ஈரோடு சமூகச்சீர்திருத்த மாநாடு.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். ஆர். சந்தானம் அவர்களாகும். இவர் பெரியாரின் தங்கை மகன். நகரசபை அங்கத்தினர். திராவிட முன்னேற்றக் கழக நகரசெயலாளர். ஈரோட்டுப் பொது மக்களால் போற்றப்படும் பொதுநல ஊழியர்.

மாநாடு சிறப்பாக நடைபெற கடந்த ஒரு மாதகாலமாக இரவு பகல் பாடுபட்டு வந்ததின் பலனை மாநாடு வெற்றியுடன் நடைபெற முடிந்தது.

மாநாட்டுக்கு முன் இரவு சுமார் ஒரு மணிக்கு தோழர் சந்தானம் அவர்களின் அருமைத் தந்தை காலமானார். தந்தை ஈமக் கடனைச் செய்யும் முக்கியமான வேலையில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தால் சந்தானம் அவர்கள் காலை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியவில்லை. மாலை 4 மணிக்குப் பிறகு மாநாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாநாடு வெற்றியுடன் நடைபெற எல்லா வேலைகளையும் கவனித்து வந்தார்.

மாநாடு காலை 9-30 மணிக்கு ஈரோடு பார்க் ரோட்டில் அமைந்துள்ள பெரிய பந்தலில் சென்னை இசைச் செல்வி ஜி. கஸ்தூரி அவர்களின் இன்னிசையுடன் ஆரம்பமாயிற்று. தோழர் சம்பத் அவர்கள் எல்லோரையும் வரவேற்று ஒருமணி நேரம் பேசினர்.

மாநாட்டை திருவண்ணாமலை நகர சபைத் தலைவர் ப. உ. சண்முகம் அவர்கள் திறந்து வைத்து சுமார் 45 நிமிடம் பேசினர். அவர் பேசும்போது நாட்டில் சமூகத்தின் பேரால் மக்கள் அடைந்துவரும் கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும் மூடப்பழக்க வழக்கங்களால் பகுத்தறிவு பாழ்படுவதைப் பற்றியும் பொதுவாக பொருளாதாரம் சீர்கேடடைந்திருப்பதற்குக் காரணம் மக்கள் விழிப்புப் பெறவில்லை என்றும் குறிப்பிட்டு அண்ணா அவர்களின் முயற்சியால் நாடு விழிப்படைந்துள்ளதை தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டினர்.

பிறகு மாநாட்டுத்தலைவர் தோழர் ஏ. கே. வேலன் அவர்களை தலைமை வகித்து மாநாட்டை சிறப்பாக நடத்திக்கொடுக்கும்படி மாநாட்டு செயலாளர் தோழர் எஸ். அப்பு அவர்கள் கேட்டுக் கொண்டார். அவரை வழி மொழிந்து தோழர்

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை அரசியலில் ராஜகோபாலாச்சாரி

.................(0).................

மத்திய அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்வார்

...............(x)...........

சென்னையில் தேர்தலை நடத்தும் வேலையை மேற்கொள்ளலாம்

சென்னை, ஆக. 7—

யூனியன் அரசாங்க உள்நாட்டமைச்சர் பதவிவகிக்கும் தோழர் இராஜகோபாலாச்சாரி இப்போதைய பார்லிமெண்ட்டரிக் கூட்டம் முடிந்தவுடன் தம் பதவியை ராஜினாமாச் செய்துவிட முயல்கிறார் என்றும், அக்டோபர் வரை பதவியைத் துறந்துவிடடுப் போக வேண்டாமென்று முதலமைச்சர் நேஹ்ரு வேண்டிக் கொண்டதன் மீது, அக்டோபர் முதல் வாரம்வரை பதவியிலிருந்துவிட்டு, பொதுத் தேர்தலுக்கு முன்னதாகப் பதவியைத் துறந்துவிட்டுச் சென்னை வந்து சேர்ந்துவிடுவாரென்றும் டில்லி அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. சென்னைமாகாணத்தில் காங்கிரசின் நிலைமைமிகக் கேவலமாகிவிட்டபடியால், பொதுத் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் எவரும் வெற்றிபெற முடியாதென்னும் நிலைமை ஏற்பட்டிருக்கிறபடியால் பொதுத் தேர்தலுக்கு 3 மாத காலத்திற்கு முன் சென்னை வந்து சேர்ந்துவிட்டால் சாணக்கியத் தந்திரங்களைக் கையாண்டு மக்களை மயக்கித் தேர்தலில் பழையபடி காங்கிரஸ்காரர்களை வெற்றிபெறச் செய்துவிடலாமென்பது காங்கிரஸ்காரர்களின் நோக்கமாகும்.

இதற்காகவேண்டியே இராஜகோபாலாச்சாரி இப்போது ராஜினாமாப் பிரச்னையைத் துவக்கியுள்ளார் என்ற வதந்தி மேல் வட்டாரங்களில் பரவியிருக்கிறது. இப்போது இத்வாய் ராஜினாமா செய்துவிட்டிருப்பதால், உடனடியாக ராஜகோபாலாச்சாரியும் ராஜினாமா செய்வது நேஹ்ரு மந்திரிசபை மீது மக்களுக்கு அவநம்பிக்கை எழச் செய்துவிடுமாகையால் அக்டோபர்வரை பதவியிலிருப்பது என்ற முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது.

மாலை மணி

சென்னை 8-8-51 புதன்கிழமை

நேருவைத் தாண்டன் எதிர்க்கிருர்!

லட்சுமணபுரியில் உத்தர பிரதேசக் காங்கிரசின் நிர்வாகக் கமிட்டி நேற்றைத்தினம் ஆசார்ய ஜுகல் கிஷோர் தலைமையில்கூடி; "காங்கிரசை விட்டு வெளியேறியவர்கள அனைவரும சட்டசபைகளிலிருந்தும் ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்தும் உடனடியாக வெளியேற வேண்டு" மென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இந்தக் கூட்டம் நடக்கவும், இத்தகைய தீர்மானம் நிறைவேற்றவும் முக்கியக் காரணமாக இருந்தவர் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தாண்டனேயாவார் இவா கமிட்டிக் கூட்டத்தை முடித்துக்கொண்டு டில்லிக்குப் புறப்பட்ட சமயத்தில், பத்திரிகைக்காரர்கள் இவரைப் பேட்டி கண்டபோது, "உத்தரப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானமானது எல்லோருக்கும் பொருந்தும், புனர் நிர்மாண இலாக்காவின் அமைச்சராயிருக்கும் ஏ. பி ஜெயின்கூட இந்தத் தீர்மானப்படிதான நடந்து கொள்ளவேண்டும்" என்று கூறினுர்.

கித்வாயையும், ஜெயினையும் மந்திரிப் பதவிகளைவிட்டு வெளியனுப்ப முதலமைச்சர் நேரு விருமபவில்லை. அவர்களிருவரும் சமர்ப்பித்த ராஜினுமாவையும் நேரு ஏற்றுக்கொள்ள மனமின்றி அவர்கள் காங்கிரசிலிருக்க விருப்பாவிட்டாலும், மந்திரிபபதவியை விட்டு விலக வேண்டாமென்று வேண்டிக் கொண்டார்.

நேருவின் இச்செயலைத் தாண்டன் கண்டித்ததுடன், இவ்வாறு செய்ய நேருவுக்கு உரிமையில்லையென்றும் அவர் காங்கிரசுக்குக் கட்டுப்பட்டே நடந்துகொள்ள வேண்டுமென்றும் தாண்டன் அறிக்கை வெளியிட்டதுமட அ. இ. கா. காரியககமிட்டியில நேரு மீது நடவடிக்கை எடுததுக் கொளவதற்கான முயறசிகளைச் செய்ததுடு, கித்வாயசுருப் பிடிக்கவிலலையாதலாலும், தமமால் நேருவுக்குத் தொலலை ஏற்படக் கூடாதென்றும் கருதிய கித்வாய் மீண்டும தம பதவியை ராஜிநாமா செய்த பிடிவாதமாக வெளியேறிவிட்டார்

இந்தச் சமயத்திலும், ஜெயினை வெளியே போயவிடாதவாறு நேரு மிகவும் வேணடிக் கொண்டதன மீது அவர் மட்டும் இன்னும் மந்திரிப்பதவியிலிருக்கிருர்.

எனவே, நேருவின் இந்தச் செயலைக் கண்டிக்கும் முறையில் தான் இப்போது உத்தரப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியை இவ்வண்ணம் தீர்மானம் செய்யுமாறு செய்திருக்கிருர் தாண்டன்.

நேருவை அடிமையாக, கைப்பதுமையாக வைத்து நடத்தவே தாண்டன் முயல்கிருரேயொழிய, நேரு, தம் விருப்பபபடி, நாட்டின் நலனுக்கு உகந்தது என்று தாம் கருதுகிறபடி ஒன்றையும செய்துவிட முடியாதபடி அவரை அடக்கி வைத்திருககிருர் என்பது இந்த நடவடிக்கைகளிலிருந்து நன்கு தெரிகிறது

ஆகவே, நேரு தன்மானத்தைக் காத்துக்கொள்வதில் விருப்பமுடையவராயிருந்தால், உடனடியாகத் தம முதல் மந்திரிப் பதவியையும் காங்கிரஸ் தொடர்பையும் விட்டு விலகவேண்டும். பதவிப் பித்து விடவில்லையென்றுல், தாண்டனின் அடிமையாயிருந், நாட்டுக்கோ, பொதுமக்களுக்கோ நன்மை செய்ய முடியாவிட்டாலும், காங்கிரஸ் சுயநலமிகளுக்கும், கள்ளச் சந்தைகளுக்கும் ஊழல்களுக்கும் ஆதரவாக இருந்து கொண்டிருக்க வேண்டும்.

இவற்றுள் எதை நேரு தெரிந்தெடுக்கப் போகிருர் என்பது அவருடைய மனப்பான்மையைப் பொறுத்ததாகும். இவற்றிலிருந்து காங்கிரஸ் ஸ்தாபனத்தின போக்கு எங்ஙனம இழிநிலையடைந்து கிடக்கிறதென்பதைப் பொதுமக்கள் நன்கு உணாந்து கொள்ளலாம்.

'காஸ்'ஸிலிருந்து கந்தகம்

லண்டன், ஆக. 8—

'காஸ'களிலிருந்து புதுமுறை ஒன்றின் மூலம கந்தகம் தயாரிக்கலாம் என்பது இங்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கடம்பூர் கழகத் தோழர்கள் வழக்கு

கடம்பூர், ஆக. 8—

கடம்பூர் தி. மு. கழக தோழர்கள் வழக்கு நேற்று கோவில்பட்டி சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நமது கழகத் தோழர்கள் மா. க. செல்லையா, மா. சோமசுந்தரம், பெ மு. பொன்னுச்சாமி, சி. ராமசாமி ஆகியோர்கள் ஆஜரானுர்கள். ஷி வாயிதாவுக்கு எதிரிகளான காங்கிரசார் ஒருவரும் வரவில்லை யென்பதை யறிந்தவுடன் கோர்ட்டார் அவர்கள் மீண்டும் வாயிதா 8-8-51-ல் போட்டிருக்கிருர்கள். (ந-கி)

காங்கிரஸ் ஆட்சி மக்களை ஒட்டாண்டிகளாக்கிவிட்டது

———(0)———

நாட்டின் செல்வம் முதலாளிகளிடம் சிக்கிவிட்டன

..............(0)..............

ஆட்சியாளர் முதலாளிகளை ஆதரிக்கின்றனர்

ஜபல்பூர், ஆக. 7—

அன்னியர் ஆட்சியிலிருந்து விடுதலைப்பெற்ற பிறகு அபிவிருத்தியடைவதற்குப் பதிலாக இந்தியா நாளுக்குநாள் பொருளாதாரத் துறையில் சீர்கேடு அடைந்து கொண்டே வருகிறது மக்களின் நிலையும் வாழ்க்கைத்தரமும் வரவர மோசமாகிக் கொண்டே வருகின்றன.

காங்கிரசு அரசாங்கம் முதலாளித்துவத்தையே ஆதரிக்கிறது. நாட்டின் செல்வமெல்லாம் ஒரு சில முதலாளிகளிடமே சிக்கிக்கொள்ளுமாறு காங்கிரஸ் அரசாங்கம் செய்து வைத்திருக்கிறது. இதன் பயனுகப் பாமர மக்கள் வறுமையின் உச்சநிலையை அடைந்துவிட்டனர், என்று அசோக் மேத்தா ஜபல்பூரில் பேசினுர்.

நாட்டின் உண்மையான இந்த நிலையை நாட்டு மக்களும் கண்டுணர்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனல், அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெறவேண்டுமென்பதற்காகக் காங்கிரஸ்காரர்கள் இந்த 4 ஆண்டுத் ஆட்சிக் காலத்தில் என்னென்னவோ சாதித்துவிட்டிருப்பதாகக் கட்டுப்பாடான பொய்ப் பிரசாரம் செய்யப் பின் வாங்கமாட்டார்கள் என்று தெரிகிறது. பொதுமக்கள் இம்முறையும் காங்கிரஸ்காரர்கள் வார்த்தைகளை நம்பி முன்போல ஏமாறமாட்டார்கள் என்பது வெளிப்படை.

....

சூயஸ்கால்வாய் தகராறு

—

எகிப்து-யு. எஸ் சமரச பேச்சுவார்த்தை?

நியூயார்க், ஆக. 7—

சூயஸ்கால்வாய் போக்குவரத்து விஷயமாக எகிப்து மீது இஸ்ரேல் கொண்டுவந்துள்ள புகார் இன்று ஐ. நா. பாதுகாப்புக் கௌன்சில் முன்பு வரவிருந்தது ஆனல் அதை வியாழக்கிழமை வரை ஒத்திப்போட முயற்சி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

எகிப்து ஸ்தானிகருக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்க இலாகாவுக்குமிடையே சமரசப் பேச்சுவார்த்தை நடைபெறுவதை உத்தேசித்து இம்மாதிரி ஒத்திப்போடப்பட்டிருக்கிறதோ என்று கருதப்படுகிறது.

இப்போது தயாராக உள்ள பிரிட்டன், யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரான்ஸ் இவைகளின் கூட்டுத்தீர்மானம் வியாழனன்று கூட பிரேரிக்கப்படுமா என்ற சந்தேகம் இருந்து வருகிறது.

....

ஷேக்ஸ்பியர் நாடக நிபுணர்கள் மாநாடு

லண்டன், ஆக. 6—

ஷேக்ஸ்பியர் நாடகங்களில் நிபுணர்களான பல தேசத்து பிரபலர்கள் 30 பேர் ஆகஸ்ட் 16வ ஷேக்ஸ்பியர்பிறந்த இடமானஸ்டிராட்போர்ட் ஆன் ஆவானில் மாநாடுகூடுவர்.

தங்கத்திலிருந்து உரோனியம்

ஜோஹன்னஸ்பாக், ஆக. 7—

தங்கம் அதனுடன் உள்ள கல்கட்டி இவைகளிலிருந்து உரோனியம் தயாரிப்பதற்கான விசேஷ தொழிற்சாலைகள் இங்கு ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இப்படி எடுக்கப்படும் உரோனியம் சர்வதேச உடன்படிக்கையின்படி யுனைடெட்ஸ்டேட்ஸுக்கும் கனடாவுக்கும் தான் விற்கப்பட வேண்டும்.

—

பிளாஸ்டிக் எலும்பு ஒட்டவைப்பதில் வெற்றி

லண்டன், ஆக. 6—

பாதிக்கப்பட்ட கால் எலும்பை அகற்றிவிட்டு பிளாஸ்டிக் எலும்பு வைத்து ஆப்ரேஷன் செய்யபட்ட ஒரு பெண் தாராளமாக எவ்வித ஊனமும் இன்றி நடப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

செயற்கை எலும்பில் சதையை ஒட்ட வைப்பதுடன் பெரும்பாடான காரியமாம்.

....

நோயாளிகள் ஆராய்ச்சி பொருளல்ல

—

டாக்டர்களுக்கு எச்சரிக்கை

லண்டன், ஆக. 5—

நோயாளிகளை டாக்டர்கள் சிலர், தங்கள் ஆராய்ச்சிகளுக்கான பொருள் என்று கருதுகிறுர்கள். இது தவறு அவர்கள் அவ்வித மானப்பான்மையை கொண்டிருக்கலாகாது என்று 'பிராக்டிஷனர்' என்ற சஞ்சிகை எழுதியுள்ளது.

முதலில் தன்னிடம் வந்த மனிதனின் உயிரைக் காப்பாற்ற வேண்டியதே முக்ய லட்சியமாக இருக்கவேண்டும் என்றும பின்னர்தான் தன் அறிவுத்தாகத்தைத் தீர்த்துக்கொள்ள வழிதேடவேண்டும என்றும் இக்கட்டுரையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இக்கட்டுரையை எழுதியவர்கள் இரு பிரபல பிரிட்டிஷ் டாக்டர்கள்.

ஒருவர் லண்டனின் மாபெரும் ஆஸ்பத்திரியான 'கய்'யின் பிரதம சர்ஜன் ஒகில்வி, மற்றொருவர் இருதய நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் வில்லியம் தாம்ஸன்.

இக்கட்டுரை பிரபல டாக்டர்களிடையே வாதப்பிரதிவாதத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

....

பிரிட்டிஷ் அணுக்குண்டு ஒத்திகை

—

ஆஸி பாலைவனத்தில் நடைபெறும்

லண்டன், ஆக. 8—

பிரிட்டிஷ் அணுக்குண்டுகள் பரிட்சார்த்தமாக பிரயோகித்துப் பார்க்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

அநேகமாக இந்த ஒத்திகைகள் ஆஸ்திரேலியாவின் மத்தியிலுள்ள பாலைவனத்தில் நடத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

கலகம் விளைவிக்க குண்டர்களின் சதி

தேனீ ஓர் சிறிய நகரம், வாணிபஸ்தலம். அங்கு தி மு கழகக் கூட்டம் நடத்தவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். நான் 20-6-51ந் தேதி அங்கு வருவதாக முன்பு எழுதியிருந்தேன் பின்பு, எனக்கேற்பட்ட சில எதிர்பாரா வசதி குறைவு காரணமாக அந்தத் தேதியை மாற்றி 4-7-51-ல் கூட்டம் வைத்துக்கொள்ளும்படி அவர்களுக்கு எழுதினேன். 25-6-51ல் எழுதிய அந்தக் கடிதம் 26-6-51ல் தேனீக்குச் சென்று அவர்களுக்குக் கிடைத்தது. தேனீ கழகத் தோழர்கள் கூட்டத்திற்கும், ஒலி பெருக்கிக்கும் 27-ந் தேதி அனுமதி வாங்கினார்கள்.

இந்த நிலையில் 4-7-51 மாலை 6 மணிக்கு நேதாஜி மைதானத்தில் தி மு கழகக்கூட்டம் நடைபெறுமென்ற விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதே நேரத்தில் அதே இடத்தில் காங்கிரஸ் கூட்டமொன்று நடக்கப் போவதாகவும் அதில் என. ஆர். தியாகராசன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராசர் மற்றும் பெரியகுளம் தாலுக்கா சுற்றுப் பிரயாணத் தலைவர்களும் பேசுவார்கள் என்று தேதி கிடையாத நோட்டீஸ் 2-7-51-ல் மக்கள் கையில் கொடுக்கப்பட்டது.

தி, மு. கழகக் கூட்டம் தேனீயில் நடக்கவொட்டாமல் தடுத்து விட வேண்டும் என்பதே அவர்களுடைய திட்டம். இதற்கு என ஆர். தியாகராசனும் தமிழ்நாட்டு ராஷ்டிரபதி காமராஜரும ஒத்துழைப்பு! எப்படியிருக்கிறது அவர்கள் யோக்யதை?

அரசியலின் பேரால் இவ்வளவு மட்டரகமான வேலை நடைபெறுகிறது. காமராஜர் இருக்கும் வரை தேசீபான்ற காலிதத்தனம் நடந்தே தீரும். காமராஜர் சுட்டுவிரல் ஆட்டத்திற்கு நடுங்கும் மந்திரிகள் இருக்கும் வரை இந்த மட்டரக வேலைகள் நடக்கத்தான் செய்யும்.

நான் தேனீயில் நடந்ததை இன்று இங்கு சொல்லுகிறேன். நாளை நீங்கள் யாரவேண்டுமானாலும் தேனீயில் சென்று விசாரித்துப்பாருங்கள் அல்லது மட்டரகங்கள் தேனீ பற்றி பேசினாலும் கேட்டுப்பாருங்கள். நான் கூறுவதைத் தவிர வேறு எவ்வித மாற்றமும இருக்க முடியாது!

நான் சென்று பேசினால் தேனீ என்ன எரிந்துவிடுமா? எடுத்து விளக்கட்டும் மக்களிடம் எங்கள் மேலுள்ள குறைபாடுகளை இல்லை யேல புத்தியைத் திருத்திக் கொள்ளட்டும்.

இத்தகைய கீழ்த் தரமான, பேமைத்தனமான இழிச்செயலைப் பற்றி அதே ஊர் காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஒரு நோட்டீஸ அடித்து வழங்கியிருக்கிறார். அதையும் வாசிக்கிறேன் கேளுங்கள் (இரு நோட்டீஸ்களும் வாசித்துக்காட்டப்பட்டன) இந்த இரு நோட்டீஸ்களுமே போதும் வேறு நீதிபதி தேவையில்லை. அந்த ஊர் காங்கிரஸ் தலைவர் தனக்கும்

ஆளுங்கட்சி என்று சொல்லி அதிகாரியை மிரட்டினர்

அடியாட்கள் உதவி கொண்டே 'ரௌடித்தனம்'

'தேனீ'பற்றி நெடுஞ்செழியன் விளக்கம்

(நேற்றையத் தொடர்ச்சி)

"தேனீ" வெறிச்செயல் காங்கிரஸ் குண்டர்களால் முன்னதாகவே சதி செய்யப்பட்டுதான் நடைபெற்றிருக்கிறது என்பது தோழர் இரா, நெடுஞ்செழியன் அவர்கள் பேசியுள்ள பேச்சிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அவருடைய பேச்சு அடியிற் கொடுக்கப்பட்டுள்ளது.

அன்று நடைபெறவிருக்கும் காங்கிரஸ் கூட்டத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை யென்றும் அன்று எவ்வித அசம்பாவிதங்கள் நடந்தாலும் தன்னைப் பொறுத்ததாகாது என்றும் எல்லாவற்றிற்கும் அந்த ஊர் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியையே சாருமென்றும் தோழர் குருசாமி நாயகர் என்ற பெயருடைய அந்த காங்கிரஸ் தலைவர் விட்டிருக்கும் நோட்டீஸ் எதைக் காட்டுகிறது? இதிலிருந்து முன்னேற்பாடாகவே கலகம் விளைவிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றிருக்கிறது என்றுதானே தெரிகிறது. சப் இன்ஸ்பெக்டர் இரண்டு கூட்டமும் ஒரே நேரத்தில் வைத்துக்கொள்ள அனுமதிக்க முடியாதென்றும் அப்படி நடந்தால் கலகம் விளைய நேரிடுமென்றும் எச்சரித்திருக்கிறார் அதற்குசப்இன்ஸ்பெகடரிடம் தோழர் என். ஆர். தியாகராஜன் கூறினாராம், தி. மு. கழகக்கூட்டம் நடக்க ஒட்டாமல் தடைசெய்வதற்காகதான் நாங்கள் கூட்டம் நடத்த அனுமதி கேட்கிறோம் என்று. அதை சப் இன்ஸ்பெகடர் ஏற்றுக்கொள்ளவில்லை தி. மு. கழகத்திற்கு முன்னதாகவே அனுமதி கொடுக்கபட்டு விட்டதாகையால் காங்கிரஸ் கூட்டத்திற்குக் கொடுக்க முடியாதென கண்டித்துக் கூறியிருக்கிறார், உடனே "நாங்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்து பேசு!" என்று மிரட்டியிருக்கிறார் தியாகராஜனர், சப் இன்ஸபெக்டர் அந்த மிரட்டலுக்கு சற்றும் மிரளாமல், மீறி காங்கிரஸ் கூட்டம் நடக்குமேயானால் 144 உத்தரவு பிறப்பித்து விடுவதாகக் கூறினர். நாங்கள் மந்திரிவரை போய் ஒருகைபார்த்து விடுகிறோம் என்று தியாகராஜன மேலும கூற சங்கடமான நிலையிலுள்ள சப் இன்ஸபெக்டர் நடுநிலையில் நின்று தீர்ப்பு கூறியிருக்கிறார் அதாவது, திராவிட முன்னேற்றக் கழகம் பகல் இரண்டு மணியிலிருந்து 4 மணி வரையும், காங்கிரசார் மாலை 6 மணியிலிருந்து 10 மணி வரையும் கூட்டம வைத்துக் கொள்ளும்படி கூறினர். தி. மு. கழகத்தோழர்கள் அதையும ஒப்புக் கொண்டிருக்கின்றனர் கண்ணியத்தோடு.

நல்ல வெய்யில் பட்டப்பகல் 2 மணிக்கு கூட்டம் நடக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றனர் கழகத் தோழர்கள. ஆனல் காலை 10 மணியிலிருந்தே காங்கிரஸ் மேடையிலே ஒலி பெருக்கி இயங்க ஆரம்பித்து விட்டது. ஒன்று உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன் தி மு. கழகத்திற்கு மட்டும்தான் கூட்ட அனுமதி, ஒலிபெருக்கி அனுமதி இரண்டும் கொடுக்கப்பட்டிருந்தது. காங்கிரஸ்காரர்களுக்கு கூட்ட அனுமதி மட்டும்தான் உண்டு ஒலிபெருக்கி அனுமதி கிடையாது. அப்படியிருந்தும் அவர்கள் மேடையில் ஒலிபெருக்கி வேலை செய்ய ஆரம்பித்து பாட்டுக்கள் போடப்பட்டன

நான் மாலை 6-மணிக்குத்தான் கூட்டம் என்று நினைத்து, அன்று காலை 11½ மணிக்கு பஸ் மூலம் தேனீ சென்றேன். அங்கு நம் கழகத் தோழர்கள் என்னை எதிர்கொண்டு அழைக்க வந்திருந்தனர். அவர்கள் என்னிடம் இந்தத் தகவலைத் தெரிவித்தனர். ஊரெல்லாம் இதே பரபரப்பாக இருந்தது.

எனக்கு முன்பே தெரியும் தேனி எப்படிப்பட்ட ஊர் என்று. முன்பு ஒரு தடவை பட்டப் பகலில பந்தலை நெருப்பிட்டுக் கொளுத்தி யிருக்கிறார்கள். பிறகு அண்ணா அவர்கள் பேசவிருந்த கூட்டத்தில் கொடி பிறக்கப்பட்டு கொளுத்தப் பட்டது. 30 நாட்களுக்கு முன்பு தோழர் சம்பத் பேசியிருக்கிறார் 15 நாட்களுக்கு முன்புதான் தோழர் குருசாமி அங்குபேசியிருக்கிறார்.

இவைகளை யெல்லாம் அறிந்து தான் நானும கூட்டத்திற்கு ஒப்புக் கொண்டு அங்கு போனேன்.

கூட்டம் நடப்பதற்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே ஏராளமான அடியாட்கள் கத்தி, கம்புகளுடன் ஜீப் காரில் வந்து இறங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. நானேக்கு முதுகை சரியானபடி வைத்துக்கொள்ளுங்கள் என்று நம் கழகத் தோழர்களிடம் கிண்டலாககூறியிருக்கிறார்கள் இதை யறிந்தபோலீசார் கலகம் நடப்பது உறுதியென்று அறிந்து டி. எஸ் பி. க்கு தந்திகொடுத்திருக்கிறார்கள் டி. எஸ. பி. ஏ. எஸ். பி. க்கு தந்தி கொடுத்து அவரை அதற்கான ஏற்பாடுகள் செய்யச்சொல்லிருக்கி[illegible] துப்பாக்கிப் பிரயோகம் செ[illegible] வேண்டிய நிலைமை ஏற்படக்[illegible] மென்று சி. ஐ. டி. ரிப்போர்[illegible] மறிந்த போலீசார் சப்மர்[illegible] ரேட்டையும் தயாராக தருவி[illegible] வைத்திருக்கின்றனர். 2 ரி சா[illegible] போலீஸ் வான்களும் முன்[illegible] பாடாகக் கொண்டுவந்து பக்[illegible] திலுள்ள பெரியகுளத்திலே [illegible] திருந்தனர்.

அனுமதியில்லாதிருந்தும் [illegible] கிரஸ மேடையில் ஒலிபெரு[illegible] வைக்கப்பட்டிருந்தது, [illegible] அவர்கள் கையிலிருப்பதனால்.

நான் கூட்டம்நடக்குமிடத்[illegible] சிறிது தூரத்திலுள்ள ஓர் வீ[illegible] மாடியில் தங்கியிருந்தேன். க[illegible] தோழர்கள் வந்து என்னை கூட்[illegible] திற்கு அழைத்தார்கள். நான் இ[illegible] வெயயிலில் எதற்கு மக்[illegible] வாட்டவேண்டும்? சற்று க[illegible] கூட்டம் துவக்கலாமே என[illegible] கூடச் சொன்னேன், அவர்கள் [illegible] ஜனங்கள் வெய்யிலைப் பொ[illegible] படுத்தமாட்டார்கள் என்று [illegible] என்னை கூட்டம் நடக்குமி[illegible] திற்கு அழைத்துச்சென்றார்[illegible] அதற்கு முன்பே நம் கழக மே[illegible] யில் காங்கிரஸகாரர்கள் வ[illegible] அமர்ந்து கொண்டு இருந்த[illegible] இதைக் கண்ட நம் கழகத்தோ[illegible] கள் கழக மேடையில் காங்கி[illegible] கூட்டம் நடக்கப்போகி[illegible] போலும்! என்று வேடிக்கைய[illegible] கூறினர்கள். கழகக்கூட்டம் [illegible] பெற வேண்டிய நேரம் வந்து[illegible] டுங்கூட காங்கிரஸகாரர்கள் க[illegible] மேடையைவிட்டு அகலவில்லை.

நம் கழக மேடைக்கு பக்[illegible] லேயே காங்கிரஸ மேடையை[illegible] அமைத்திருந்தார்கள் பக்கத்[illegible] என்றால 4 அடி, 5 அடி இ[illegible] மென்றுகூட எண்ணவேண்[illegible] ஒரே ஒரு அடிதானிருக்கும [illegible] மேடைக்கும், காங்கிரஸ [illegible] கும் இடையில் உள்ள தூ[illegible] கிரஸ மேடையில் 3 காங்கி[illegible] கொடிகளும், கழக மேடை[illegible] 2 தி. மு. க. கொடிகளும் பறந்[illegible] கொண்டிருந்தன. (தொடரும்)

....

பருத்தி தேயிலை பறிக்க இயந்திரம்

லண்டன், ஆக. 8—

பருத்தி, தேயிலை, புகையிலை முதலியவைகளை செடிகளிலிருந்து பறிக்கு[illegible] வேலையைச் செய்யும் இயந்திர[illegible] உற்பத்தி செய்வதில் இங்குள்ள எஞ்[illegible] னியர்கள் ஊக்கம் காட்டிவருகின்றனர்.

உஷ்ண தேச விவசாயத் தொ[illegible] லுக்கு ஏற்ற இயந்திரங்களை [illegible] செய்யும்படி இந்த எஞ்[illegible] கேட்டுக்கொள்ளப் பட்டிருக்[illegible]

புகையிலை சேகரிக்கும இயந்திரம் ஒன்று தென்ரொடிஷியாவில் வெற்றிகரமாக வேலை செய்துவருவதாக கூறப்படுகிறது.

....

சயாம் சர்க்காரின் வீடுகட்டும் திட்டம்

பாங்காக் ஜூலை 27—

சயாமில் வீட்டுவாடகைகள் மிகவும் உயர்ந்துள்ளன ஆகவே சயாம் தன் சிப்பந்திகளுக்காக முதலில் 200 வீடுகளை கட்ட திட்டம்போட்டிருக்கின்றன[illegible]

நெல்லை மாவட்டத்தில் கழகப் பிரசாரம்

—————(0)—————

ட்டரகங்களின் வாலாட்டம் ஒடுங்கியது

தி மு.க அமைப்புக் குழுச் செய ளர் தோழர் என் வி: நடராசன், -7-51 முதல் 3.8.51 வரை ல்லை மாவட்டத்திலே சுற்றுப் ணம் செய்து வந்துள்ளார். ல்களுக்கு ஏராளமான பொது க்களும் தொழிலாளர் தோழர் நம் கழகக் கொள்கை கோட் டுகளுக்குக் காட்டிய பேராதரவு றிப்பிடத்தக்கதாகும். செங் ட்டையில் கூட்டத் துவக்கத் லயே கூட்டத் தலைவர் சொற் ழிவாற்றிக் கொண்டிருகையில் டாகக் கும்பலைச் சேர்ந்த லைந்த அடியாட்கள் கூட்டத் தக் கலைக்க எண்ணி ஓலமிட்ட ர். ஆனல் அங்கே கூடியிருந்த ர்களுக்கு ஏற்பட்ட ஆவமும் ளர்ச் யும் கற்பித்த "புத்திமதி ன் காரணமாக மட்டரகப் பேர் ழிகள் 'அய்யோ அப்பாடா' ன்று கதறிக் கதறி ஓட்டமெடுத் னர். சுற்றுப்பயண நிகழ்ச்சியில் க்கிரமசிங்கபுரம் தி. மு. கழக யலாளர் கடைசிவரை உடனி து ஆவண செய்தார். கூட்டங் ில் 'தேனி' சப்பவக் கண்டனக் மானங்களும் நிறைவேறின.

ம்பா சமுத்திரம்

37-7-51 மாலை 7-மணிக்கு இவ் பார்ப்பனத்தெருக் கோடியில் ாதுக் கூட்டம் நடைபெற்றது. ழர் கந்தசாமி தலைமை வகித் ர் தோழர் என். வி. என் 2மணி ரம் திராவிடதனி நாடு என் ன்னும் பொருள்பற்றி பேசினர்.

வநல்லூர்

18-க் தேதி இரவு 8மணிக்கு வீர ல்லூர் தி. மு. க. துவக்குவிழா தேறியது. எட்டையாபுரம் ன், சமுதாய இழிவு பற்றி தோழர் என. வி. நடரா ப்பிரிவினையே நல்வாழ்வு ாகும் என்பதைப்பற்றி பேசி ர் இரவு 12-க்கு கூட்டம் முடி றது.

விக்ரமசிங்கபுரம்

29-7-51 மாலை 7—மணிக்கு னிமா அடுத்த மைதானத்தில ாபெருங் கூட்டம் நடந்தேறியது. ராளமான தொழிலாளர் தோழர் களும் வந்திருந்தன. தோழர் கே ந்தசாமி தலைமை வகிக்க எட்டை ரம கவிஞன் கழகப் பணியை றி எடுத்துரைத்தார் அடுத்து தோழர் என், வி. என் 1918 தல 1951—வரை தொழிலாளா க சம்பந்தமான நிகழ்ச்சிகளை விளக்கமாகப் பேசியதுடன் ராவிடநாட்டுப் பிரிவினைக்குத் தொழிலாளர் தோழர்களது ஒத்து ழைப்பின் அவசியத்தையும் விளக் னர் விகாமசிங் புரம் பஞ்சாலைத் தொழிலாளாசார்பிலும் கழகங்களமலா மாலைகள அணிவிக்கப பட்டன.

பொட்டல் புதூர்

30-7.51 இரவு 8 மணிக்கு சந் தைக்கடை மைதானத்தில பொதுக் கூட்டம் நடந்தேறியது. தோழர் கந்தசாமிசிறிதுநேரம்பேசினர் தோழர் என் வி. நடராசன்நாட்டுப்பிரி வினையால் கஷ்டம் யாருக்கு என் பதை விளக்கி புள்ளி விவரத்துடன் சொற்பொழிவாற்ற கூட்டம் இரவு 1-30 மணிக்கு முடிவுற்றது.

பாளையங்கோட்டை

31-7-51 மாலை 6-30 மணிக்கு பாளையங்கோட்டைத் திடலில் இலங்கை தி. மு. க. உறுப்பினர் டி எஸ் பழனிச்சாமி தலைமையில் மாபெருங்கூட்டம் நடந்தேறியது தோழர் கந்தசாமி டவுன் பஸ் கட்டண உயர்வை கண்டித்துப் பேசினர். தோழர் என். வி. என். பேசுகையில் தேசத் துரோகிகள் யார் என்பதை இந்நாட்டின் அரசி யல் ஆதாரங்களையெல்லாம் எடுத் துக்காட்டி விளக்கி சொற்பொழி வாற்றினர்

கல்லிடைக்குறிச்சி

1-8-51 மாலை, கடைத்தெரு அடுத்த திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கந்தசாமி யும், மற்றும் சில தோழர்களும் பேசினர். இறுதியாக தோழர் என். வி. நடராசன் தற்கால அரசி யல் நிலை உணவு நெருக்கடி ஆகிய வைகளைப்பற்றிப் பேசினர்.

"பேப்பர் நியூஸ்"

கூட்டம் முடிந்ததும், உடனே காரில் நெல்லை சென்று நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் குழுவின ரால் நடத்தப்பட்டுவரும் 'பேப்பர் நியூஸ்' என்ற சமுதாய சீர்திருத்த நாடகத்திற்கு என். வி. நடராசன் தலைமை வகித்தார்.

செங்கோட்டை

3—8—51 பகல் 1 மணிக்கு தோழர் என். வி. நடராசன் அவர் களும், சிங்கை கந்தசாமி அவர் களும் செங்கோட்டை வந்து சேர்ந்தனர். கழகத் தோழர்கள் ரயிலடியில் வரவேற்று உபசரித் தனர்.

உயர்நிலைப்பள்ளியில்

பகல் செங்கோட்டை உயர் நிலைப்பள்ளி மாணவக் குழுவின ரின் வேண்டுகோளுக்கிணங்க அன்று பகல் 3-30 மணிக்கு உயர் நிலைப்பள்ளி மண்டபத்தில் தலைமை ஆசிரியர் தோழர் கோபால கிருஷ்ணய்யர் அவர்கள் தலைமை யில தோழர் என் வி. நடராசன் திருக்குறள்' என்னும் பொருளைக் குறித்து சொற்பொழிவாற்றினர். ஏராளமானமாணவத்தோழர்களும் ஆசிரியர்களும்வந்திருந்தார தலைமை ஆசிரியர் முடிவுரையில் தோழர நடராசன் அவர்களை பாராட்டிப் பேசியதோடு மலர் மாலை அணிவிக் கப்பட்டது.

பொதுக்கூட்டத்திலே

இரவு 7மணிக்குசெங்கோட்டை பாக்கிலநடைபெற்ற பொதுக்கூட் டத்திலே ஆயிரக்கணக்கான மாண வர்களும் பொது மக்களும் கூடி யிருந்தனர் தோழர் கந்தசாமி தலைமை வகித்துப் பேச முற்பட்ட சமயம் மட்டாகப் பேர்வழிகளான தேர்தல் அடியாட்கள் நாலைந்துபேர் சில கேள்வித்தாள்களைக் கொண்டு வந்து தலைவரிடம் கொடுத்து முன் னதாகப் பதில்கூறவேண்டுமென்று பிடிவாதம் செய்தனர். கழக நிர்வா கிகள் கேள்விகளுக்குக் கட்டாயம் கூட்டமுடிவில் பதில் அளிக்கப்படு மென்றும், கேள்வி கேட்டால் ஓடுபவர்கள் திராவிட இயக்கத்தார் அல்லவென்றும், எவ்வளவோ அமைதியாக எடுத்துக் கூறியும் கூட மட்டரகங்களின் புத்திக்கு எட்டவில்லை. பின்னர் கண்டவாறு ஓலமிட்டு. கைகளில் வைத்திருந்த கற்களை வீசினர். உடனே பொது மக்களுக்கு ஏற்பட்ட கட்டுக் கடுங்கா உணர்ச்சியின் காரணமாக என்றென்றும் நினைவிருக்கக்கூடிய புத்தியை புகட்டவே மட்டாகங் கள் ஓட்டமெடுத்தனர். கடைசி வரை கூட்டத்தின் பக்கம் தலை காட்டவுமில்லை.

இந்தச் சிறு குழப்பம் துவக்கத் திலேயே பத்து நிமிடநேரம் நடை பெற்றபின் தோழர் என். வி. நட ராசன் திராவிட நாட்டுப் பிரிவி னையைப் பற்றியும், அதிலே கேர ளம், ஆந்திரம், கன்னடம், தமிழ் பகுதிகளுக்குள்ள உரிமையையும் மிக விளக்கமாகப் பேசியதோடு, காங்கிரஸ் ஆட்சியின் அநீதிகளை ஆதாரபூர்வமாக எடுத்துக் கூறினர்.

தோழர் என். வி. நடராசன் அடுத்தநாள் காலை செங்கோட்டை யிலிருந்து புறப்பட்டு ஈரோடு மாநாட்டில் கலந்துகொண்டு 6-ந் தேதி சென்னை வந்து சேர்ந்தார்.

ஈரோட்டில்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கோபிராஜு, மதியழகன், ராஜமா ணிக்கம், பெத்தாம்பாளையம் பழனி சாமி முதலியோர் பேசினர்கள் பிறகு மாநாட்டுத்தலைவர் தோழர் ஏ. கே வேலன் அவர்கள் பெருத்த கைத்தட்டுதலுக்கிடையே எழுந்து தமது தலைமையுரையை நிகழ்த்தி னர்.

பின்னர் தோழர்கள் தில்லை வில் லாளன் சி. பி. சிற்றரசு மனோகரன் கோபிராஜு ஆகியவர்கள் பேசிய பிறகு மாநாடு பகல் உணவுக்காக கலைந்து பகல் 3-மணிக்கு ஆரம்ப மாயிற்று.

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட படி தோழர்கள் காஞ்சி கல்யாண சுந்தரம், என். வி. நடராசன், மதி யழகன், அன்பழகன், இரா. நெடுஞ்செழியன் ஆகியவர்கள் பேசினர்கள். பின்னர் தீர் மானங்கள் தலைவரால் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறை வேறின.

பெருத்தகைதட்டுதலுக்கிடையே அறிஞர் அண்ணா அவர்கள் சுமார் ஒன்றரை மணி நேரம் பேசினர். (விவரம் பின்னர் வரும்) பிறகு தலைவர் முடிவுரைக்குப்பிறகு தோழர் அப்பாவு நன்றிகூறமாநாடு இரவு 8 மணிக்கு முடிவுபெற்றது இரவு 10 மணிக்கு நடைபெறும் நாடகத்திற்காக மக்கள் 9 மணிக்கே கொட்டகையை அடைந்து கொட் டகை இடங்கொள்ளாதவாறு செய்தனர். நாடக ஆரம்பத்திற்கு முன்பு சென்னை இசைச்செல்வி ஜி. கஸ்தூரியின் இசைவிருந்து சுமார் 1மணிநேரம் பக்கமேளத் துடன் நடைபெற்றது.

சரியாக இரவு 10 மணிக்கு நாட கம் ஆரம்பமாயிற்று. தோழர் சந் தானம் அவர்கள் ஈரோடு நகர சபைத் தலைவரவர்களை நாடகத்திற் குத் தலைமைவகித்து சிறப்பாக நடத்திக்கொடுக்க கேட்டுக்கொண் டதற்கிணங்க அவர் தலைமைவகித் தார். ஆரம்பத்தில் கோபி ராஜு அவர்கள் நீதிதேவன் மயக்கம் என்னும் நாடகக் கருத்தை விளக் கிக் கூறினர். நாடகத்தில் அறி ஞர் அண்ணா அவர்களும், தோழர் கே. ஆர். ராமசாமி மற்றும் பலரும் பங்குகொண்டனர். நாடகம் இரவு 2-30 மணிவரை நடைபெற் றது.மாநாட்டுசெயலாளர்களில்ஒரு வரான தோழர் பெருமாள் அவர் கள் மாநாட்டுக்கு வந்திருந்த யாவருக்கும் நன்றி கூறியும் மாநாட்டுத் தொண்டர்கள் ஆற் றிய பணியை மெச்சியும் அவர்களை பாராட்டினர்.

மாநாட்டிற்கு சேலம் சோமசுந்தரம் இரா. நாராயணசாமி, திருச்சி வண மாமலை, சாப்பு, சி வி. எம். அண் ணமலை, என். வி. நடராசன், சி. பி. சிற்றரசு டி. எம். பார்த்தசாரதி பெத்தாம்பாளையம் பழனிசாமி, பழைய கோட்டை பட்டக்காரர் ப. உ. சண்முகம், கண்ணதாசன், தில்லைவில்லாளன், கோவிந்தராஜு ராஜமாணிக்கம். இரா. நெடுஞ் செழியன். கே. ஏ. மதியழகன், அன் பழகன், மனோகரன், காஞ்சி கல்யாணசுந்தரம், திண்டுக்கல் மூத்து மற்றும் கழக முக்கியஸ்தர் களும் வந்திருந்து மேடையில் அமர்ந்திருந்தனர்.

காங்கிரஸ் ஆட்சியில்

12-8-51 முதல் அரிசி அளவு 8 அவுன்சிலிருந்து 6 அவுன் சாக குறைத்து விட்டதையும் விலையில் 1 படிக்கு 7 தம்பிடி உயர்த்தி விட்டதையும் கண்டித்து,

பெரியமெட்டு, வேப்பேரி ஐரோடிலுள்ள வெட்னரி காலேஜ் எதிரிலுள்ள நேவல் ஆஸ்பத்திரி ரோட் சாவஜன சீர்திருத்த மகா சங்கத்தில் 9—8—51 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு ஒரு கண்டனக் கூட்டம் நடைபெறும்.

க. ஆரியசங்காரன் தலைமையில் கவிஞர் கண்ணதாசன், என் ஜீவரத்தினம், என வி நடராசன், சி. வி ராஜகோபாலாச்சாரியார் மலாயா சாமபசிவம், எம். கே. டி சுப்ரமணியம், புலவர் பொய் கண்டார், ச. ரா. பொன்னரங்கம் ஆகியோர் பேசுவார்கள்.

கா. மாணிக்கம்

ஒலிபெருக்கி உண்டு அமைப்பாளர்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantial Prees, Muthumari Chetty Street, Madras-1